முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 17.10.2025 , அ.வ.எண்.369/2021 பி. வா.சா.2.ஜெயந்தி, க/பெ. பழனிச்சாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் வேலை பார்க்கவில்லை. எனக்கு என்ன வருமானம் என்றால் எதுவும் இல்லை. 03.11.2000 ல் எனக்கு திருமணம் ஆகியதாக சொல்லியுள்ள நிலையில் எங்கு வைத்து திருமணம் நடந்தது என்றால் கோட்டுர் மலையாண்டிபட்டிணம், இனாம் கோவில் விநாயகர் கோவிலில் வைத்து நடந்தது. மேற்படி திருமணம் பெற்றோர் நடத்தி வைத்ததா அல்லது காதல் திருமணமா என்றால் நாங்களாக விருப்பப்பட்டு நடத்திய திருமணம், திருமணத்திற்கு யாரெல்லாம் வந்தது என்றால் நாங்கள் இருவர் மட்டும் தான் சென்றோம். மேற்படி திருமணம் மாலை மாற்றி தாலி கட்டி தான் செய்து கொண்டோம் என்றால் ஆமாம். மேற்படி திருமணம் நடந்ததற்கு புகைப்படம் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை,

2) அது போன்று திருமணமே நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் முதல் மனைவியை பிரிந்தற்கு பின்னிட்டு தான் நாங்கள் திருமணம் செய்து கொண்டோம் என்று கூறியுள்ள நிலையில் எவ்வளவு நாட்களாக அவர்கள் பிரிந்து இருந்தார்கள் என்றால் 2000 ம் ஆண்டிலிருந்து என்னுடன் தான் இருந்தார். அவர்கள் சட்டப்படி பிரிந்துள்ளார்கள் என்று கூறியுள்ள நிலையில் அதற்கான நீதிமன்ற உத்தரவுகள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு முன்பு டாக்டர். பழனிச்சாமியிடம் நான் வேலை பார்த்தேனா என்றால் இல்லை. பக்கத்து

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

வீட்டில் குடியிருந்தார் அதனால் கொஞ்சம் உதவியாக இருக்கும் படி கேட்டதால் உதவி செய்தேன்.

3) நான் எந்த வேலையும் பார்க்கவில்லை அவருக்கு உதவியாக இருந்து வந்தேன். நான் டாக்டர். பழனிச்சாமியிடம் டோக்கன் போடும் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். எனது பூர்வீகம் எது என்றால் கோட்டூர் மலையாண்டிபட்டிணம் ஆகும். எனது பெற்றோர் வீடு சொந்த வீடா வாடகை வீடா என்றால் சொந்த வீடு ஆகும். எனது பெற்றோர் வீடு எத்தனை அறை கொண்ட வீடு என்றால் 8 அறைகள் கொண்ட வீடு ஆகும். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும். எங்களுக்கு தங்குவது வீடு இல்லாததால் தான் மருத்துவரிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் அவரது வீட்டிற்கு பின்னால் நான் தங்குவதற்கு சின்னதாக ஒரு வீடு கொடுத்தார் என்றால் இல்லை. டாக்டர் பழனிச்சாமியின் அண்ணன் பெயர் என்ன என்றால் அந்தோணி ஆகும்.

4) டாக்டர் பழனிச்சாமியோடு சொத்துக்களை சேர்ந்து வாங்கியதாக சொல்லும் சகோதரரின் பெயர் என்ன என்றால் பொன்ராம் ஆகும். பொன் ராம் என்ன வேலை பார்க்கிறார் என்றால் பெயிண்டர் வேலை பார்க்கிறார். 2009 ல் பொன்ராமும், நானும் கூட்டுக்கிரயமாக வீடு வாங்கினோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும், வேலை இல்லை, பொன்ராமிற்கும் பெயிண்ட் அடிக்கும் வேலை தான் எனவே நாங்கள் இருவரும் சேர்ந்து கூட்டாக கிரயம் வாங்கினோம் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. டாக்டர் பழனிச்சாமி அரசு மருத்துவர் என்பதால் அவர் சொத்து வாங்கவேண்டும் எனில் அரசிடமிருந்து முறையாக அனுமதி பெற்ற பின்பு

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.

தான் கிரயம் வாங்கமுடியும் என்பதால் அவரிடம் வேலை பார்த்து வந்த என் பெயரிலும் அவரது சகோதரர் பெயரிலும் மருத்துவரின் பணத்தில் கிரயம் வாங்கினார் என்றால் இல்லை.

5) டாக்டர் பழனிச்சாமியும், நானும் ஒரே வீட்டில் வசித்து வந்ததாக கூறியுள்ள நிலையில் எந்த முகவரியில் எந்த வீட்டில் யாருடன் சேர்ந்து வசித்துவந்தோம் என்றால் டாக்டர் பழனிச்சாமி, நான், எனது மகன் நித்திய சரண் வசித்து வந்தோம். நான் எனது பிரமாண பத்திரிக்கையில் டாக்டர் பழனிச்சாமியின் பெற்றோர்கள் நான், எனது மகன் நித்திய சரண் வசித்து வந்ததாக கூறியுள்ளநிலையில் எந்த ஆண்டிலிருந்து வசித்து வந்தோம் என்றால் 2000 ம் ஆண்டிலிருந்து 2021 ம் ஆண்டு வரை ஆகும். டாக்டர் பழனிச்சாமியின் தகப்பனார் சங்கர், தாயார் கருப்பாயி ஆவார்கள். டாக்டர் பழனிச்சாமியின் தகப்பனார் சங்கர் எப்போது இறந்தார் என்றால் 2005 ம் ஆண்டில் இறந்தார். டாக்டர் பழனிச்சாமியின் தாயார் கருப்பாயி எப்போது இறந்தார் என்றால் 2010 ம் ஆண்டு ஆழியாரில் உள்ள அந்தோணி வீட்டில் வைத்து இறந்தார்.

6) நாங்கள் அனைவரும் 21 ஆண்டுகளாக ஒன்றாக வசித்து வந்த நிலையில் குடும்ப அட்டைவாங்கினோமா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் நாங்கள் அவ்வாறு சேர்ந்து வாழ்ந்திருந்தால் குடும்பஅட்டை வாங்கியிருப்போம் என்றும் சேர்ந்து வாழாததால் தான் வாங்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 28.05.2020 ம் தேதியில் என் பெயரிலும், டாக்டர் பழனிச்சாமியின் பெயரிலும் கூட்டாக அங்கலக்குறிச்சியில் வீடு வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கிரயம் பெற்றது டாக்டர் பணத்தில் தான் என்றும் அதில் என்னுடைய

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

தொகை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

7) எங்களது வீட்டிற்கு அருகில் கிளினிக் நடத்தி வந்தார் என்று கூறியுள்ள நிலையில் எங்களுடைய வீடு என்பது யாருடைய வீடு என்றால் எனது அம்மாவின் வீடு ஆகும். டாக்டர் கிளினிக் எந்த வீதியில் உள்ளது என்றால் மெயின் ரோட்டில் உள்ளது. எனது அம்மாவின் வீடு எந்த வீதியில் உள்ளது என்றால் மெயின் ரோட்டில் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை வலுக்கட்டாயமாக டாக்டர் பழனிச்சாமியின் கிளினிக்கில் இருந்து எடுத்து சென்றுவிட்டதாக இறந்துபோன டாக்டர் பழனிச்சாமியின் மகள் மேனகா கோட்டூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். **மேற்படி புகாருக்கான CSR வா சா ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே போல் வால்பாறை காவல் துணை கண்காணிப்பாளரிடமும் மேனகா புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

8) நான் இறந்து போன டாக்டர் பழனிச்சாமியின் கிளினிக்கில் டோக்கன் போடும் வேலை பார்த்து வந்தேன் என்றும் அவர் கொரோனாவில் இறந்துவிட்டதால் கிளினிக்கில் இருந்த அவரது ஆவணங்களை நான் திருடி சென்று விட்டேன் என்றால் சரியல்ல. நான் உண்மையான கணவன், மனைவியாக வாழ்ந்ததாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றும் அதனால் நான் சட்டப்படியான மனைவி இல்லை என்பதால் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.